Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (21-12-65) இதழ் 312

விசுவாவசு மார்கழி 6 ஷஃபான் பிறை 27 செவ்வாய்க்கிழமை

## எம். ஜி. ஆர். விஜயம்: பார்லிமெண்டில் எதிர்ரொலி

பம்பலப்பிட்டி, திங்கள்

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும் நடிகை பி. சரோஜாதேவியும் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்ததன் எதிரொலி பார்லிமெண்டில் கேட்கவிருக்கிறது. 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ந் திகதி ஜனப் பிரதிநிதிகள் சபை கூடும் பொழுது எம். ஜி. ஆர். விஜயம் சம்பந்தமாக திரு. லஷ்மண் ஜயக்கொடி பிரதம மந்திரியையும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரையும் பின்வரும் கேள்விகளைக் கேட்பார்.

தென் இந்தியாவிலுள்ள திராவிடமுன்னேற்றக்கழகத்தில் ஓர் அங்கத்தவரான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இலங்கைக்கு எப்பொழுது வந்தார்?

அவர் இலங்கையை விட்டுப் புறப்பட்டது எப்பொழுது?

அவர் இலங்கையிலிருந்தபொழுது கலந்து கொண்ட கூட்டங்களும் விழாக்களும் யாவை?

அக்கூட்டங்கள், விழாக்கள் அனைத்தைப் பற்றியும் குற்றப்பிரிவு இரகசியப் பொலிசார் குறிப்புகள் வைத்திருக்கின்றனரா?

இல்லையெனில் ஏன்?

தமிழ் அரசியல் கட்சிகளுடனும், அவற்றின் தலைவர்களுடனும் அவர் கூட்டாலோசனைகள்

(6-ம் பக்க பார்க்க)

# இடமாற்றம்: வழக்கு தொடர ஆசிரியர் முடிவு

## ஊர்வலம், கூட்டம் நடத்தவும் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஆசிரியர் இடமாற்றத்தை எதிர்த்து மாபெரும் ஊர்வலம் ஒன்றையும் பொதுக் கூட்டமொன்றையும் நடத்துவதெனவும், இடமாற்றம் கல்விச் சட்டத்துக்கு முரணாக இருக்குமிடங்களில் நீதிமன்றத்தின் உதவியை நாடுவதென்றும் வடமாகாண ஆசிரியர் சங்கமும் வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் தீர்மானித்துள்ளன. நீதிமன்றத்தின் உதவியை நாடுவது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உபசபை ஒன்றையும் அவை நிறுவியுள்ளன.

இக்கூட்டுச்சபைக் கூட்டத்தில் அழைப்பின்பேரில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையும் கலந்து கொண்டு ஆசிரியர் தெரிவித்த கருத்துகளைக் கேட்டனர். அவர்களின் குறைகளைக் கல்விமந்திரியிடம் தெரிவிப்பதாக திரு. செல்வநாயகம் கூறியதாக அறியப்படுகிறது. நாளை புதன்கிழமை கல்விமந்திரியை திரு. செல்வநாயகம் சந்திப்பாரென அறியப்படுகிறது.

வடமாகாண ஆசிரியசங்கம், வடஇலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகியவைகளின் கூட்டுச்சபை நேற்று முன்தினம் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களின் பிரச்னை சம்பந்தமாக ஆராய்ந்தது. கூட்டுச்சபை நிறைவேற்றிய தீர்மானங்கள் வருமாறு:

ஆசிரியர்களின் இடமாற்றம்பற்றிப் பொதுமக்கள் மத்தியில் உண்மை நிலையை உணர்த்துவதற்குக் கல்விப் பெரியார்களின் அபிப்பிராயங்களையும் தேசிய கல்வி விசாரணைச் சபையின் சிபார்சுகளையும் அச்சிட்டு வெளியிடுவதெனவும், மிகஅண்மையில் இரு சங்கங்களும் எமது கொள்கைகளை ஏற்கும் ஏனைய ஆசிரிய சங்கங்களையும் சேர்த்து ஒரு மாபெரும் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பிட்ட இடமாற்றம் கல்விச் சட்டத்திற்கு முரணாக இருக்குமிடங்களில் நீதிமன்றத்தை நாடி தீர்ப்புக் காண்பதுபற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரு உபசபை நிறுவப்பட்டது. நாளை ஆனைப்பந்தி உயர் கலைமன்றத்தில் இடமாற்றம் பெற்று எதிர்ப்புத் தெரிவித்த ஆசிரியர்களை அழைத்து மேல் நடவடிக்கைபற்றி ஆராய்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

## திம்மையாவின் சடலம் சொந்தஊரில் அடக்கம்

### இறுதி மரியாதையில் 300 இராணுவவீரர் கலந்து கொண்டனர்

பங்களூர், டிச. 20

சைப்பிரஸ் தலைநகரமான நிக்கோஸியாவில் கடந்த சனிக்கிழமை காலஞ்சென்ற ஜெனரல் திம்மையாவின் பூதவுடல் இன்று பகல் அவரது பிறந்த இடமான பங்களூருக்குக் கொண்டுவரப்பட்டது. அவரது சடலம் இன்று பகல் மூன்று மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

சைப்பிரஸில் ஐ. நா. அமைதிப்படையின் தளபதியாகவிருந்து மாரடைப்பினால் காலஞ்சென்ற ஜெனரல் திம்மையாவின் பூதவுடல் நேற்று பூராவும் பொதுமக்களின் தரிசனத்துக்காக நிக்கோஸியாவில் வைக்கப்பட்டிருந்தது. இன்று காலை விசேஷ விமானமூலம் அவரது சடலம் பங்களூர் கொண்டுவரப்பட்டது. பங்களூர் விமான நிலையத்தில் உயர் இராணுவ அதிகாரிகளும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் முன்னாள் இராணுவ தளபதி கரியப்பரும் மந்திரிகளும் குழுமி நின்றனர். திம்மையாவின் மனைவியும் மகளும் இங்கு வந்திருந்தனர். திம்மையாவின் சடலத்தை உயர் இராணுவ அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு, அலங்கரிக்கப்பட்ட ''ஜீப்'' ஒன்றில் வைத்தனர். அங்கிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள அவரது இல்லத்துக்கு பூதவுடல் 'ஜீப்'பில் கொண்டு செல்லப்பட்டபொழுது வீதிகளின் இரு மருங்கிலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் சூழ்ந்து நின்று மௌனமாக அஞ்சலி செலுத்தினர்.

இறுதி மரியாதையில் சுமார் 300 இராணுவத்தினர் கலந்துகொண்டனர். பூரண அரசாங்க மரியாதையுடன் திம்மையாவின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

## 'டெர்லின் சேட்' அணிய விரும்பிய வாலிபர் தற்கொலை!

யாழ்ப்பாணம், செவ்

'ரெரிலின்ஷேர்ட்' அணிய விரும்பிய 19வயதுள்ள ஒரு வாலிபர் தனது விருப்பத்தைத் தாயாரிடம் தெரிவித்தபோது தாயார் அதற்கு மறுக்கவே, அவர் கோபித்துக்கொண்டு தனது மாமியார் வீட்டில் சுமார் ஒரு வருடகாலம் வாழ்ந்த சமயத்தில்சிங்கப்பூரிலிருந்து அவரது சகோதரி கொண்டு வந்து கொடுத்த ஒரு டசின் ரெரிலின் ஷேர்ட்டுகளை ஆசைதீர அணிந்தபின் மாமியாருக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு கிணற்றில் குதித்துத் தற்கொலைசெய்து கொண்ட சம்பவம் ஒன்று வட்டுக்கோட்டையில் நிகழ்ந்துள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஏ. ஆர். இரத்தினராசா என்பவரின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவர் தபாவில் அனுப்பிய கடிதத்தை அவரது மாமியார் மரண விசாரணை அதிகாரியிடம் கொடுத்தார். பரீட்சைத் தாளில் எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தில் அவர் தற்கொலை செய்து கொண்ட கிணற்றின் படம் வரையப்பட்டிருந்தது. அக்கடிதம் வருமாறு:

''தாயற்ற எனக்கு தாயாகவும், தந்தையற்ற எனக்குத் தந்தையாகவும், சகோதரங்களற்ற எனக்கு சகோதரங்களாகவும் இருந்து கடந்த ஒரு வருடகாலமாக ஒருவித குறையுமில்லாமல் என்னை அன்போடு உங்கள் பிள்ளைகளில் ஒருவனாக வளர்த்து வந்ததற்கு எனது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.''

மேலும் மாமா, மாமி அறிவது: நான் இந்த உலகத்தில் வாழ்வதால் எல்லோருக்கும் என்னால் கரைச்சலும் துன்பமும் ஏற்படுகிறது. ஆகவேதான் இந்த உலகத்தைவிட்டுசென்று விடுகிறேன். நான் மன்னிக்க முடியாதபல குற்றங்கள் செய்து இருக்கிறன். தயவு செய்து என்னை மன்னியுங்கள்.

நான் இறந்ததற்கு தயவு செய்து ஒருவரும் கவலைப் படவேண்டாம்.

நான் தற்கொலை செய்யும் இடத்தை பின்வரும் படம் காட்டும். வணக்கம்.

இப்படிக்கு உங்கள் வளர்ப்பு மகன் ஏ. ஆர். இரத்தினராசா'

(6-ம் பக்கம் பார்க்க)

## வேள்விப்பலியை நிறுத்த சம்மதம்

### 5 வருடம் நடைபெற்ற வேள்வி வழக்கு முடிந்தது

யாழ்ப்பாணம், செவ்வாய்

கோவிலில் பலி வெட்டுவது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் சுழிபுரம் பத்திரகாளி அம்மன்கோவிலில் பலியை நிறுத்துவதற்கு இரு சாராரும் சமாதானமாக சம்மதத்தை தெரிவித்துள்ளனர்.

1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ந் திகதிக்குப் பின் அக்கோவிலில் நிரந்தரமாக பலியை நிறுத்தவேண்டும் என இவ்வழக்கின் தீர்ப்பில் கூறப்பட்டது.

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் பலி நிறுத்துவது பற்றிய வழக்கு விசாரணை நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. என். எம். ஜே. இராஜேந்திரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கு சம்பந்தமாக வாதிகள் தங்கள் மனுவில் பத்திரகாளி கோவிலில் நடக்கும் தினசரி பொங்கல், பூசை, நிர்வாகம் முதலியன வழக்கத்தின்படியும் நடைமுறைப்படியும் பெரும்பான்மை முடிவினால் நடைபெற்றுவந்ததெனவும், முகாமையாளர் சபையின் பெரும்பான்மையினர் தீர்ப்பின்படி பலி நிறுத்தப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்ததென்றும் இத்தீர்மானத்தை பிரதிவாதிகள் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லையெனவும் இதன் காரணமாக நிரந்தரமாக பலியை நிறுத்துவதற்காக நீதிமன்ற உத்தரவை கோரியுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கோவில்களில் ஆடுகோழிகளைப் பலியிடுவது நாகரீகமற்ற காட்டுமிராண்டித்தனமான' சமயத்திற்கு முரண்பாடானசெயலாகும்.

1961-ம் ஆண்டு வாதிகளினாலும். பிரதிவாதிகளினாலும் பொதுமக்களுக்கு அக்

(6-ம் பக்கம் பார்க்க)

## 2 இந்தியர் சுட்டுக்கொலை

கராச்சி, டிச. 20

லாகூர். ராஜஸ்தான் முனைகளில் பாகிஸ்தான் துருப்புகளின் நடவடிக்கையின் விளைவாக இருஇந்திய துருப்புகள் கொல்லப்பட்டனர் என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

(பி. டி. ஸி.)

## வியட்னும் யுத்தத்தை நிறுத்துக

### பாப்பரசரின் கிறிஸ்மஸ் கோரிக்கை

வத்திக்கான்நகர், டிச. 20

வியட்னுமில் யுத்தத்தை நிறுத்துமாறு பரிசுத்த பாப்பரசர் போல் கோரிக்கை விடுத்துள்ளார். கிறிஸ்மஸுக்காகுதல் இதனை நிறைவேற்றுமாறு அவர் கோரியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நெருக்கடியை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைக்க முடியும் என்று தாம் நம்புவதாக பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

(பி. டி. ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தீய எண்ணங்கள் வரும்போது சிலசமயம் மனம் கூசும். உங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு இது ஓர் அடையாளமாகும். முன்செய்த தீயசெயலை நினைக்கும்போதும் மனம் வேதனைப்படும் இவற்றை மீண்டும் செய்யமாட்டீர்கள் தியானத்தால் இந்த நினைப்புகள் அடங்கும்.

— சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 38?

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மார்கழி மீ 6 உ (21-12-65)

# வியட்னும் அக்கிரமம்

ஒரு தாய் தனது நான்கு குழந்தைகளுடன் ஒரு நதியைக் கடந்து செல்கிருள். நான்கும் சிறு குழந்தைகள். ஒரு குழந்தையை ஒரு கையால் அணைத்துக் கொண்டும் இதர குழந்தைகளை மற்றக் கையால் அணைத்துக் கொண்டும் தண்ணீரில் நடந்து செல்கிருள். கவலை தோய்ந்த முகம். குழந்தைகளைக் காப்பாற்றி பாதுகாப்பான இடத்தை போய் அடைந்துவிடலாமென்ற நம்பிக்கை அவள் கண்களில் தெரிகிறது. குழந்தைகள் முகத்தில் மகிழ்ச்சியில்லை. பீதிநிறைந்த பார்வை. ஆங்கிலப் பத்திரிகையொன்றின் முதல்பக்கத்தில்வெளிவந்திருந்த ஒரு படத்தில் தெரிந்தகாட்சிதான்இது. இந்தக் காட்சியைக்கண்டவர்கள், அவர்கள் மனம் கல்லாக இருப்பினும்கூட அதுஇளகியிருக்கும். இதுபோன்ற நெஞ்சையுருக்கும் பரிதாபக் காட்சிகளை இப்பொழுது வியட்னுமில் காணலாம் என்பதற்கு இந்த ஒரு படம் உதாரணம். வியட்னும் மக்களைக் காப்பாற்றுவதற்காக அங்கு 'தர்ம யுத்தம்' புரிவதாகக்கூறிக் கொள்ளும் அமெரிக்க 'வீரர்'களின் குண்டுகளுக்கும் வியட்னும் மக்களின் விடுதலைக்காகப் 'போராட்டம்' நடத்துவதாகக் கூறிக்கொண்டு 'கொரில்லாப்போர்' நடத்தும் வியட்காங்கியரின் தாக்குதலுக்கும், இயற்கையின் வெள்ளம் முதலிய சீற்றங்களுக்கும் தப்பி உயிர் வாழ அஞ்சி, அஞ்சி புகலிடம் தேடும் ஆயிரக்கணக்கான வியட்னும் தாய்மார்களினதும் குழந்தைகளினதும் நிலையையே அந்தப் புகைப்படம் எடுத்துக் காட்டுகிறது.

வியட்னும் மக்கள், அவர்கள் வியட்காங்கியராகவிருப்பினும் வட வியட்னுமியராக இருப்பினும் தென்வியட்னுமியராக இருப்பினும் அவர்களும் மனிதர்களே. வியட்னுமில் ஆயிரக்கணக்கான மக்கள் தாங்கள் செய்யாத பாவத்துக்காக அநியாயமாக உயிர் துறந்துள்ளனர். இன்னும்பலர் தங்கள் உயிரைப் பலிகொடுத்து வருகின்றனர்.

தென்வியட்னும் அரசாங்கத்தின் வேண்டுகோள்மீதே தாங்கள் அங்கு உதவிக்குச்சென்றிருப்பதாக அமெரிக்கா கூறுகிறது. அமெரிக்கர் 'தியாகம்' செய்வதாகவும் கூறுகிருர்கள். ஆனல் பெருந்தொகையான அப்பாவி மக்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்வதைப்பற்றி முன்னர்குரல் கொடுத்தவர்கள் கூட, அமெரிக்கா அளிக்கும் 'உதவி'க்காக வாய்மூடி மௌனிகளாகிவிட்டனர். 1954-ம் வருட ஜெனிவா ஒப்பந்தப்படி, அந்த ஒப்பந்த நாடுகளின் மகாநாட்டை மீண்டும் கூட்டி இப் பிரச்னைக்கு ஒருசுமுகமான தீர்வுகாண வேண்டுமென மீண்டும் யோசனை தெரிவிக்கப்பட்டும்கூட அது செயலாகவில்லை.

சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு வடவியட்னும் யோசனை தெரிவித்துள்ளதாக வெளிவந்த செய்தியைக்கூட வடவியட்னும் அரசாங்கம் மறுத்திருக்கிறது.

மாஸேதுங்கின் கம்யூனிஸவிஸ்தரிப்பை தடுப்பதற்காகவே அமெரிக்கா வியட்னுமில் தலையிடுகிறதென்றும் அமெரிக்காவின் ஏகாதிபத்திய விஸ்தரிப்பைத் தடுப்பதற்கே சீனு உதவிபுரிகிறதென்றும் இதற்கு ஒன்றுமறியாத அப்பாவிகளான வியட்னும் மக்கள்தான் பலியாகவேண்டுமா? தங்கள்பலப் பரீட்சையையே நேருக்குநேராகப் பரிசோதித்துக் கொண்டால் கூட பரவாயில்லை. வியட்னும் மக்களைப் பலிகொள்ளாமல் விட்டால் போதும். இனியும் வியட்னும் மக்களைத் துன்புறுத்துவது அக்கிரமமும் அநியாயமுமாகும். வியட்னுமில் தங்கள் கடமையைத் தொடர்ந்து செய்ய அமெரிக்கா திடசங்கற்பம் கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் ஒரு வைபவத்தில் தெரிவித்திருந்தார். அமெரிக்கா தனது கடமையென்ன என்பதைத் தெளிவாகச் சிந்தித்து முடிவுசெய்ய வேண்டியது அமெரிக்காவுக்கும் உலக மக்களுக்கும் நல்லது.

## உணவுப் பொருள் தட்டுப்பாடு

உருளைக் கிழங்கு, புளி, செத்தல் மிளகாய் முதலிய அத்தியாவசிய உப உணவுப் பொருள்கள் பலவற்றிற்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது.

பதுக்கல் வேட்டை நடத்தியதைத் தொடர்ந்து அத்தியாவசிய பொருள்கள் பொது மக்களுக்கு ஓரளவு கிடைத்தன என்பது உண்மையே. மீண்டும் பதுக்கல் வேட்டையைத் தீவிரப்படுத்த வேண்டுமென பிரதமர் உத்தரவிட்டுள்ளாராம். நல்லதுதான். பொருள்கள் பதுக்கப்பட்டிருந்ததும் உண்மை, பதுக்கல் வேட்டையால் அவைகள் வெளிவந்தன. மீண்டும் இறக்குமதியும் உற்பத்தியும் இல்லாமல் பதுக்கல் ஏற்பட முடியாது. இறக்குமதியை நம்பி வாழும்வரை உணவுப் பொருள்கள் மட்டுமல்ல இதர அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பது சுலபமல்ல. அத்தியாவசியப் பொருள்களுக்குத்தட்டுப்பாடு ஏற்படாமலும் பதுக்கல், கொள்ளை லாபம் முதலியவைகளைத் தடுக்கவும் இங்கு அவைகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம். உற்பத்தியை அதிகரிக்கும்வரை இறக்குமதிக் கொள்கையிலாவது சில மாற்றம் செய்ய வேண்டியது அவசியம். அரசாங்கம் [illegible] கூறிக் [illegible] கொண்டு [illegible]

ஆசிரியருக்குக் கடிதம்

# இடமாற்றம் நடந்தே தீரும்

யாழ்ப்பாணத்திலிருந்து நானூறு தமிழ் ஆசிரியர்கள் 1-1-66 தொடக்கம் தென் இலங்கைக்கு மாற்றப் பட்டிருக்கிருர்கள். இந்த மாற்றத்தை விரும்பாததால் விசித்திரமான பல காரணங்களைக் காட்டிப் பொதுமக்களையும், அரசியல்வாதிகளையும், அரசாங்கத்தையும் மனமாற்றும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள்.

### 1. சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள்

அரசாங்கம் பாடசாலைகளை எடுத்தநாள் தொடக்கம் அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பளம், வீட்டு வாடகை, இலவசப் புகையிரதச் சீட்டுகள், விதவை அனுதைப் பென்ஷன், லீவுகள் எல்லாம் அதே அளவில் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் கிடைத்துக்கொண்டு வருகின்றது. வேறு சலுகைகள் சில கிடைக்கவில்லை என்று சொல்லுகிருர்கள். அவை எவை என்று தேரியவில்லை.

### 2. திட்டமற்ற இடமாற்றம்

இந்த இடமாற்றத்தைத் திட்டமற்ற இடமாற்றம் என்று சொல்லுகிருர்கள்.

ஆசிரிய சங்கங்கள் வகுத்து உவந்தளித்த திட்டம் தான் என்ன? புள்ளி அடிப்படையில் மாற்றம், வயது அடிப்படையில் மாற்றம், சேவை அடிப்படையில் மாற்றம் இதில் எது வேண்டும் என்ருல் ஒன்றும் வேண்டாம். மாற்றமே வேண்டாம் என்று பதில் கிடைக்கின்றது. சிங்கள ஆசிரியர்கள், முஸ்லிம் ஆசிரியர்கள் இலங்கை எங்கும் போக ஆயத்தமாய் இருக்கிருர்கள்; போகிருர்கள் தமிழ் ஆசிரியர்கள் மட்டும் அசையமட்டோம்; போக மாட்டோம் என்ருல் அதன் அர்த்தம் என்ன?

பாடசாலைகள் முகாமையாளர் கையில் இருந்தபொழுதும் ஆசிரியர்கள் இடமாற்றங்கள் நடந்திருக்கின்றன. அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்த பின்பும் 1-12-60 தொடக்கம் தெருவுக்குத்தெரு, கிராமத்துக்கு கிராமம், ஐந்து மைல் சுற்றளவுக்குள் மாற்றங்கள் நடந்திருக்கின்றன. இதை எந்த ஆசிரிய சங்கமும் எதிர்க்கவில்லை. இன்று நூறு, இருநூறு மைல் தூரத்தில் மாற்றம் என்றதும் பல நொண்டிச் சாக்குகளைச் சொல்லித் தப்பப்பார்க்கிருர்கள்.

### 3. மேலதிக ஆசிரியர்கள்

தென்னிலங்கையில் இருந்து ஆசிரியர்கள் இங்கு எப்படி வந்தார்கள் என்று ஒரு புது வினு எழுப்பப்படுகின்றது. "இலங்கை எங்கும் சேவை செய்யத் தயார்" என்று எழுதிக்கொடுத்த ஆசிரியர்கள் இலங்கையில் இருக்கும் ஓர் இடத்துக்கு எப்படி வந்தார்கள் என்பது விந்தையிலும் விந்தையான வினு.

இங்கே பிறந்து வளர்ந்தவர்களை, சந்ததி சந்ததியாக வாழ்ந்தவர்களை, மனைவி மக்கள், வீடு வாசல், நிலபுலம் உள்ளவர்களைப் பார்த்து இங்கே வரவேண்டாம் என்று சொல்வதற்கு எவருக்கும் உரிமை இல்லை.

### 4. திகதி எல்லை வரம்பு

1-12-60-க்கு முன்னும் பின்னும் என்ற ஓர் எல்லைக் கோட்டை வரைந்து அந்தத் திகதிக்கு முன் இருந்தவர்கள் அங்கே தென்னிலங்கையில் இருக்கட்டும் நாங்கள் இங்கே யாழ்ப்பாணத்தில் இருக்கிருேம் என்ருல் இது என்ன? இருதேசங்களுக்கிடையில் நடக்கும் யுத்தமா? அல்லது ஆசிரியர்கள் இடமாற்றமா? இது என்ன நீதியோ! நியாயமோ! [illegible] 1-1-66 தொடக்கம் ஆசிரியர்கள் வேறுபாடு இன்றி ஒரே சேவை மூப்பு அட்டவணை தயாரிக்கப்படவிருக்கின்றது. பொதுமக்களுள் நூற்றுக்குத்தொண்ணூறு வீதமாணவர்களும் அரசாங்க சேவையாளருள் நூற்றுக்கு நூறு வீதமானவர்களும் ஆசிரியர்களின் இந்த இடமாற்றத்தை வரவேற்கின்ருர்கள்.

சில ஆசிரிய சங்கங்களும் ஒரு சில அரசியல் வாதிகளுமே எதிர்க்கின்ருர்கள். வலுவற்ற வாதங்களும், நீதியற்ற போராட்டங்களும் உலக வரலாற்றில் வெற்றி கண்டதில்லை. காணப்போவதும்இல்லை. எப்படியும் இன்றில்லாவிட்டாலும் இன்னெரு நாள் ஆசிரியர்களின் இடமாற்றம் நடந்தேதீரும் என்பதை ஆசிரிய உலகம் அறியத்தான் செய்யும்.

மு. இரத்தினசிங்கம்
யாழ்ப்பாணம்.

## ஸ்ரீபஞ்சமுக முத்துவிநாயகர் லட்சார்ச்சனை

கொழும்பு, செவ். கொழும்புசெட்டியார்தெரு ஸ்ரீ முத்துவிநாயக சுவாமி கோயிலில் பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ள ஸ்ரீபஞ்சமுக முத்துவிநாயக சுவாமிக்கு இன்றுலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும், கணபதி ஹோமமும் நடைபெறுகிறது, மாலையில் புஷ்பத்தண்டிகையில் சுவாமி எழுந்தருளித் திருவுலா வருவார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

யும், இலங்கையை ஒரு சிறையாக மாற்றி அதில் நிரந்தரக் கைதிகளாக நம்மை வைத்திருப்பது பெரிய கொடுமையென்றும் அவர் மிக உணர்ச்சியுடன் கூறினுர்.

ஆனல் மலாயா, லண்டன் இவ்விடங்களிலிருந்து டிக்கெட்டுக்குப் பணம் வந்தால் உடனே டிக்கெட் கொடுக்க அனுமதிப்பார்களாம்! டயஸ்கள் அரசாங்கம் நீங்கினுலும், அவர்களது ஆட்கள் பல இலாகாக்களிலுமிருந்து பழைய தர்பாரை நடத்துவதாகவும் தெரிவித்தார் அன்பர்.

அந்நியச் செலாவணியை வீணுக்கக் கூடாதுதான். ஆனல் ஏர்சிலோனிலே செல்ல அந்நியச்செலாவணி தேவையில்லை. எல்லாவற்றையும்விட பிரயாண உரிமை அடிப்படை மனித உரிமைகளில் முக்கியமானதாகும். பிரதமர் டட்லியின் தேசிய அரசாங்கம் இந்த உரிமையை மக்களுக்கு மீண்டும் அளிக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

சங்கமித்தை விழா கொழும்பிலே கவர்னர் ஜெனரலின் தலைமையில் நடந்தபோது விஷேச காட்சியில் சங்கமித்தையாக நடிக்க இருந்த பெண் வர முடியாது போயிற்ரும். 20நிமிஷநேரம் பத்மாசனத்திலிருந்து தியானம்செய்யக்கூடிய உயரமும், கவர்ச்சியுமுள்ள பெண்மணி அப்பாகத்துக்குத் தேவை. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஒரு தமிழ்ப்பெண்மணியே முடிவில், அப்பாகத்தை ஏற்று மேலான முறையில் நடித்து, பலரது பாராட்டுதலையும் பெற்ற ரகசியத்தை ஓரன்பர் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

நீதியாய் நிலனுகி நெருப்பாய் நீராய் நிறைகாலாய் இவையிற்றின் நியமமாகிப் பாதியாயொன்ருகி யிரண்டாய் மூன்ருய்ப் பரமாணுவாய்ப் பழுத்த பண்களாகிச், சோதியாயிருளாகிச் சுவைகளாகிச் சுவைகலந்த அப்பாலாய் வீடாய் வீட்டின், ஆதியாய் அந்தமாய் நின்ருன் தன்னை ஆரூரிற் கண்டடியேன் அயர்த்தவாறே.

— அப்பர் சுவாமிகள்

# ஐயாறன் எழுதுவது

சென்ற ஞாயிறன்று சென்னையிலே "சங்கீத சீஸன்" ஆரம்பமாகிவிட்டது. அங்கு நேரில் போக முடியாதவர்கள் ஆகாசவாணியின் தயவால் விழாவின் பல நிகழ்ச்சிகளையும் இங்கிருந்தே கேட்க முடிகிறது. இரவு 12 மணிவரையிலும் விசேஷமாக ஒலிபரப்புகின்ருர்கள். இதற்காக இலங்கை சங்கீதப் பிரியர்கள் சார்பாக ஆகாசவாணிக்கு 'பெரிய தாங்ஸ்' கூறவேண்டும்.

ஞாயிறன்று குழிக்கரையாரின் நாகசுரத்துடன் விழா மங்களகரமாக ஆரம்பமாயிற்று. அன்று இரவு 12 மணிவரை நாமகிரிப் பேட்டையார் ஜமாய்த்துவிட்டார். சென்னை சென்று டிக்கெட் வாங்கி நேரில் கச்சேரிகளைக் கேட்பதாயின் செலவும் சங்கடங்களும் அதிகமிருக்கும். வானெலி மூலம் இருக்குமிடத்திலிருந்தே நாம் நிம்மதியாக காசு பணம் செலவில்லாமல் கேட்க முடிகிறது. 'டெலிவிஷ'னும் வந்துவிட்டால் நேரில் சென்றே பார்த்துக் கேட்பதுபோலவே இருக்கும். விஞ்ஞானம் நமக்கு எவ்வளவு நன்மை செய்யக் காத்துள்ளது!

ஃ ஃ ஃ

முதல் நாள் கூட்டத்துக்குத் தலைமை வகித்த சென்னை தொழில் மந்திரி வேங்கடராமன் ஒரு நல்ல யோசனை கூறினுர். நல்ல சங்கீத விற்பன்னர்களின் பாட்டுக்களைப் பதிவுசெய்து, எதிர்கால மக்களின் நன்மைக்காக, ஓர் "இன்னிசை இல்லம்" அமைத்து அவற்றைப் பாதுகாக்கவேண்டும் என்ருர்.

நல்ல வேளையாக பல உயரிய சங்கீதக்காரர்களின் இன்னிசைகள் கிராமபோன் ரிகார்டுகளில் பதிவு செய்திருக்கிருர்கள். அவர்கள் மறைந்தாலும் அவர்களின், இன்னிசை மறையாமல் நமக்கும் எதிர்கால சந்ததிகளுக்கும் இன்பமும், பயனும் அளித்துவருகின்றன. கிராமபோன் கம்பெனிகள் வியாபார நோக்கத்துடனேயே அவ்விதம் செய்கின்றன. கலை வளர்ச்சிக்காகச் செய்யுமென எதிர்பார்க்க முடியாது.

இந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும். பொதுமக்களுக்கு இந்த இசைச் செல்வமெல்லாம் இலவசமாகக் கிடைக்கக் கூடியதாக இருக்க, சென்னை அமைச்சர் கூறியதுபோல், இலங்கையிலும் அவ்வித 'இசை இல்லம்' ஏற்படுவது நல்லதாகும். இலங்கை வானெலி சில இசைகளை ஒலிப்பதிவு செய்துள்ளது. 'இசை இல்லம்' ஏற்பட்டால் இந்தச் சேவையை விரிவாகவும் அதிக பயனுள்ள முறையிலும் செய்ய முடியும்.

ஃ ஃ ஃ

சென்னைக்குச் சென்று நேரில் இசைவிருந்துகளைப் பருக ஓரன்பர் பகீரத முயற்சிகளைச் செய்தார். பாஸ்போர்ட், விஸா எல்லாம் எடுத்தார். ஏர்சிலோனுக்குப் பணம்கட்டி டிக்கெட் எடுக்கவும் தயாராகச் சென்ருர். ஆனல் ஏற்கனவே அவர் யாத்திரை சென்றுவிட்டதாயும், இனி ஜன்மத்திலும் இலங்கையை விட்டுச் செல்லமுடியாதென்றும், அதுதான் சட்டம் என்றும் தடுத்துவிட்டார்களாம்.

மந்திரிகள் சிபார்சுசெய்தும்கூட, குட்டி அதிகாரிகள் அனுமதிக்க மறுப்பதா

((4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரான்ஸின் புதிய அதிபராக ஜெனரல் டிகோல்மீண்டும் தெரிவு

## கூடுதலான பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை

பாரிஸ், டிச. 20

பிரான்ஸின் புதிய ஜனதிபதியாக ஜெனரல் டி'கோல் மீண்டும் தெரிவுசெய்யப் பட்டுள்ளார். ஆனல் இம்முறை அவருக்குக் கூடுதலான 'வெற்றி' கிடைக்க வில்லையென்று முதலில் கிடைக்கப்பெற்ற உத்தியோகபூர்வமான செய்திகள் கூறுகின்றன.

பிரான்ஸின் ஜனதிபதி தேர்தல் நடைபெற்று முடிவுகள் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் படாதபோதிலும் ஜெனரல் டி' கோலே எதிர்த்துப் போட்டியிட்டவர், ஜனதிபதி தேர்தலில் டி' கோல் வெற்றிபெற்றதை ஒப்புக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் டி' கோல் இப்பொழுது இரண்டாவது தடவையாக பிரான்ஸ் ஜனதிபதியாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார். இவர் ஐந்தாவது ஜனதிபதியாவர். ஏழு ஆண்டுகாலம் இவர் ஜனதிபதியாகவிருக்கலாம்.

1958-ம் ஆண்டில் நடைபெற்ற ஜனதிபதி தேர்தலில் ஜெனரல் டி' கோல் வெற்றிபெற்றிருந்தார், அப்பொழுது அவர் அமோக வெற்றியீட்டியிருந்தார். ஆனல் இம்முறைப் போட்டியில் குறைந்தளவு 'மெஜாரிட்டி'யினல்தான் இவர் வெற்றிபெற்றிருக்கிருரென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் டி' கோலுக்கு சுமார் ஒரு கோடி இருபத்தைந்து லட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன. இவரை எதிர்த்துப் போட்டியிட்டவருக்கு ஒரு கோடி ஐந்து லட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன.

புள்ளிவிபரங்களுடன் கூடிய விபரமான முடிவுகள் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை அறிவிக்கப் படவில்லை.

---

# "கலைகள் வளரும் இடம் கோயில்"

## ஆகம, சில்ப சதஸ்ஸில் சா. கணேசன் பேச்சு

சென்னை, டிச. 20

"கண்ணுக்கும், செவிக்கும் இனிமையூட்டும் கலைகளையெல்லால் நம் கோயில்களில் சேர்த்து வைத்தனர் நமது முன்னேர்கள். அங்கு இடம்பெருத நற்கலைகள் இல்லை" என்று திரு. சா. கணேசன், மயிலை ஆகம சில்ப சதஸ்ஸில் "கோயிலும் வாழ்வும்" எனும் பொருள் பற்றிப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது, "இனியவற்றை நுகரக் கூடாது என்று சமணமதம் வற்புறுத்திய போது, உலக இன்பங்களை அனுபவித்துக் கொண்டே ஆண்டவன் அருளைப் பெறலாம் என்ற உண்மையை விளக்க, ஆழ்வார்களும் நாயன் மார்களும் நல்லனவற்றை யெல்லாம் கோயிலில் சேர்த்து வைத்து ஈசனை வழிபடும் முறையைக் கூறினர்.

### கலை வளரும் இடம்

கலைகள் வளரும் இடம் கோயிலாகும். கோயிலில் இல்லாத கலைகள் இல்லை. சோஷலிஸ முறையில் இன்பங்களை எல்லாம், எல்லோரும் அனுபவிக்கும் இடமாகக் கோயில்கள் அமைந்துதுள்ளன.

ஒருவன் பக்தியில்லாமல் வெறும் சிற்பங்களைப் பார்ப்பதற்காக கோயிலைக் சுற்றி வந்தால் கூட, அவன் செல்லும் பாதை ஒரு பிரணவப் பிரதக்ஷணமாகி விடும்.

கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் பெயர்கள் கண்டபடி மாற்றக் கூடாது. ஆதியில் இருந்த பெயர்களையிட்டே அழைக்க வேண்டும். இராமனுக்கு தென்னட்டில் உள்ள அவ்வளவுகோயில்கள் வட நாட்டில் இல்லை. அயோத்தியிலேயே, நகரத்தார் சென்று தான் கோயில் கட்ட வேண்டியிருந்தது.

### "கோவில்களை ஏழாக பிரிக்கலாம்"

மகாபலிபுரம் சிற்பக் கல்லூரி தலைமை ஆசிரியர் திரு. கணபதிஸ்தபதி பேசுகையில்; நம் கோயில்கள் வெறும் பிரார்த்தனை மண்டபங்களல்ல என்று கூறினர்.

"பார்ப்பதற்கு நமது கோவில்கள் ஒன்று போல இருந்தாலும் நுணுகிப் பார்த்தால் அவற்றுக்கிடையே உள்ள வேற்றுமைகள் தெரியும். கோயில்களை ஏழு விதங்களாகப் பிரிக்கலாம். நவீன பாணி கலையைப் பற்றிச் சொல்கிருர்கள். நம் கோயில் விமானங்களை அதி நவீன கலை என்று கூற வேண்டும். மனித உடலின் அங்கங்களை விமானத்தில் காணலாம். விமானத்தின் அமைப்பைக் கொண்டே அதற்கு என்ன குணமுள்ள பிம்பம் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கிறது என்பதை அறியலாம்" என்றும் திரு. கணபதி ஸ்தபதி கூறினர்.

---

## இந்தியாவுக்கு செக்.உதவி

புதுடில்லி, டிச. 20

இந்தியாவுக்கு செக்கோஸ்லோவேகியா 40 கோடிரூபா கடனுதவியாக வழங்கவிருக்கிறது.

இந்தப்பணம் எட்டுமுதல் பன்னிரண்டு வருடங்களில் திருப்பிக்கொடுக்கப்படும்.

---

## சூடானும் நடவடிக்கை

கெய்ரோ, டிச. 20

ரொடீஷிய நெருக்கடிகள் குறித்து பிரிட்டனுடனன தன்து ராஜீய உறவுகளை முறிப்பதென்று சூடான் முடிவு செய்துள்ளது,

சூடான் மந்திரிசபையின் அவசரக் கூட்டமொன்றில் இம்முடிவு மேற்கொள்ளபட்டது. (பி. டி. ஸி.)

---

## சிறை அதிகாரி கொலை

மெல்போர்ன், டிச. 20

மெல்போர்ன் சிறைச்சாலையிலிருந்து இருகைதிகள் தப்பியோடுகையில் ஒரு சிறை அதிகாரி சுட்டுக்கொல்லப் பட்டார். (பி. டி. ஸி.)

---

இந்தோனேஷியாவில்

# சீன எதிர்ப்பு நடவடிக்கைகள்

## நிறுத்துமாறு பீகிங் கோரிக்கை

பீகிங், டிச. 20

இந்தோனேஷியாவில் சீனர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை உடனடியாக நிறுத்துமாறு இந்தோனேஷியாவை கம்யூனிஸ்ட் சீன மீண்டும் கேட்டுள்ளது.

சீன எதிர்ப்பு நடவடிக்கைகள் இந்தோனேஷியாவில் அதிகரித்துவருவதால் அங்குள்ள சீன மக்கள் பல தொல்லைகளுக்கும் ஆளாகி வருகின்றனர் என்றும் இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டித்து அவர்களுக்கு எதிராக வன்மையான நடவடிக்கைகள் எடுக்குமாறும் சீன கேட்டுள்ளது.

இம்மாதம் பத்தாம் திகதி இந்தோனேஷியாவின் ஒரு பகுதியில் நடைபெற்ற பல "இன வெறி" சம்பவங்கள் குறித்தும் சீன ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

"சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் அன்றைய தினம் சீனர்களுக்குச் சொந்தமான பல கடைகளை நாசப் படுத்தி, பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் கோடரிகளாலும், பெரிய பொல்லுகளாலும், மற்றும் ஆயுதங்களினலும் கடைகளைத் தாக்கியிருக்கின்றனர். இந்தச் சம்பவங்களின்போது பலர் காயமடைந்திருக்கின்றனர். ஒருவர் பாரதூரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிருர். ஆர்ப்பாட்டக்காரர்கள் சீன இளம் பெண்களைக் கடத்திச் சென்று கற்பழித்திருக்கின்றனர். இந்தச் சம்பவங்கள் யாவும் திட்டமிடப்பட்ட சிலரினல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும்" என்றும் இந்தோனேஷியாவை பீகிங் அரசாங்கம் கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாக இந்தோனேஷியாவுக்கு சீன அரசாங்கம் வன்மையான ஆட்சேபக் குறிப்பொன்று அனுப்பியுள்ளது.

---

இந்தோனேஷியா

# சதிகாரர்களுக்கு மரணதண்டனை?

ஜாகர்த்தா, டிச. 20

இந்தோனேஷியாவில் 'செப்டம்பர் 30' புரட்சியில் சம்பந்தப்பட்டு குற்றவாளிகளாகக்காணப்படுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படலாம் என்று தெரியவருகிறது.

சதியில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்கலாம்என்று இந்தோனேஷிய அதிபர் சுகர்ணே நேற்று வெளியிட்ட விசேஷ உத்தரவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

---

# பாக். துப்பாக்கி பிரயோகம் நீடிக்கிறது

ஷில்லாங், டிச. 20

பாகிஸ்தானியர்களின் துப்பாக்கிப் பிரயோகம் அஸாமில் நீடித்து வருவதாக அறிக்கப்பட்டுள்ளது. இதன்விளைவாக ஒரு பகுதியிலிருந்து முப்பத்தைந்து குடும்பங்கள் பாதுகாப்பான வேறு இடத்துக்கு அப்புறப் படுத்தப்பட்டிருக்கிருர்கள்.

மேற்கு வங்காளத்தில் நாடியா பகுதியில் பாகிஸ்தானிய துருப்புகள்தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துவருகின்றனர் என்றும் இதன்காரணமாக இப்பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது,

பாகிஸ்தானிய துருப்புகள் இங்கு தாக்குதல் நடவடிக்கைகளை அதிகரித்து வருவதாகவும் அவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

நைரோபி, டிச. 20

எதியோப்பிய சக்கரவர்த்தி ஹெயிலிசெலாஸி இன்று இங்கு ரொடீஷிய நெருக்கடிகள் குறித்து ஆபிரிக்க தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவார். (பி. டி. ஸி)

---

இந்திய-பாக். நெருக்கடி

# "விளைவுகளை தாங்குசக்தி இரு நாடுகளுக்கும் கிடையாது"

— அயூப்கான்!

கராச்சி, டிச. 20

இந்தியாவுக்கும்பாகிஸ்தானுக்குமிடையே நிலவும் நெருக்கடிகள் தீவிரமாகி அதனல் ஏற்படும் விளைவுகளைத் தாங்கிக்கொள்ளும் சக்திகள் இரு நாடுகளுக்குமே கிடையாது என்று பாகிஸ்தான் அதிபர் அயூப் கான் நேற்று இங்கு தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு விஜயஞ் செய்துவிட்டு தாயகம் திரும்பிய அதிபர் அயூப்கான் நேற்றுப் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்பொழுதுதான் அவர் மேற்கண்ட கருத்தைவெளியிட்டார்.

இந்தியா — பாகிஸ்தான் போர்விளக்க உடன்பாடு குறித்து நிருபர் ஒருவர் கேட்ட கேள்விகளுக்கு அதிபர் அயூப்கான் பதிலளிக்கையில்; பாகிஸ்தானுச்கு ஏற்றவகையில் காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்படுமானல் போர்விளக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட பாகிஸ்தான் தயங்கமாட்டாது என்று கூறினர்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவிகள் கிடைக்குமா என்று மற்றுமொரு நிருபர் அதிபர் அயூப்பைக் கேட்டார். அதற்கு அவர் பதிலளிக்கையில், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா மீண்டும் உதவிகள் அளிப்பது குறித்து பேச்சு எதுவும் எழவில்லை என்று கூறினர்.

---

# பாக். இராணுவ அதிகாரிகளுக்கு பீகிங்கில் கொரில்லா பயிற்சி

## ராவல்பிண்டியில் சீன இராணுவ கோஷ்டி

புதுடில்லி, டிச. 20

சுமார் நூறு பாகிஸ்தான் உயர் இராணுவ அதிகாரிகள் கம்யூனிஸ்ட் சீனவில் கொரில்லா போர் முறை பயிற்சி பெற்றுவருகிருர்கள் என்று ஏஜன்ஸி செய்திகள் கூறுகின்றன.

பீகிங்கில் பயிற்சி பெறும் பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு ஊடுருவல் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருவதாக இச்செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையே பீகிங்கிலிருந்து வந்த சீன இராணுவ அதிகாரிகள் கோஷ்டியொன்று ராவல்பிண்டியில் இருக்கிறதென்றும் அவர்கள் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு கொரில்லா போர் முறை பற்றி ஆலோசனை கூறி வருவதாயும் இச்செய்திகள் கூறுகின்றன.

---

## ஒன்பது நாடுகள்

லண்டன், டிச. 20

ரொடீஷியா நெருக்கடி சம்பந்தமாக சூடான், கினியா, தன்ஸானியா, கானு, மொறிடானியா, ஐக்கிய, அரபு குடியரசு, மாலி காங்கோ, அல்ஜீரியா ஆகிய ஒன்பது நாடுகள் பிரிட்டனுடன் ராஜீயத் தொடர்புகளை முறித்துக்கொண்டன. (பி டி. ஸி.)

---

ஜினேஞ, (ஸ்பெயின்) டிச. 20

இங்கு ஒரு காகிதத்தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில்ஆறு தொழிலாளர்கள் பலியானர்கள். 14 பேர் காயமடைந்தனர்

(பி டி. ஸி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. ஜி. க்கு வரவேற்பளிக்க துரித ஏற்பாடுகள்

பம்பலப்பிட்டி, திங்கள்

இலங்கை தூதுகோஷ்டிக்குத் தலைமைதாங்கி ஐக்கிய நாடுகள் சென்ற திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எதிர்வரும் புதன்கிழமை இலங்கை வந்து சேரும்பொழுது அவருக்கு மகத்தான வரவேற்பொன்றை கட்டுநாயகா விமான நிலையத்தில் அளிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

நீர்கொழும்பிலுள்ள பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து வரவேற்பளிப்பதற்காக ஒரு குழுவொன்றை அமைத்துள்ளதாகவும் 30 பேர்கொண்ட அந்தக் குழுவில் உதவி தபால் தந்தி மந்திரி திரு. டபிள்யூ. மெண்டிஸ், நீர்கொழும்பு எம். பி. ஆகியோர் உட்பட பலர் அங்கம் வகிப்பதாகவும் தெரியவருகிறது.

திரு. பொன்னம்பலம் கட்டுநாயகா விமான நிலையத்தில் வந்திறங்கும் பொழுது ஜெயமங்களகீதங்கள் பாடவும் கண்டியன் நடனம் நடாத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மூன்று பாஷைகளிலும் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டு கொடுக்கப்படும்.

ஃ ஃ ஃ

பருத்தித்துறை, திங்கள்

ஐ. நா. சபைக்கு இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் தலைவராகச் சென்று திரும்பும் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு அவரது சொந்த ஊரான வடமராட்சியைச் சேர்ந்த அல்வாயில் மாபெரும் வரவேற்பு ஒன்றளித்து கௌரவிக்க ஏற்பாடுசெய்யப்பட்டுவருகிறது.

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறைநகர எல்லைக்குள் நவீன வசதிகளை உடைய பொது நூல்நிலையம் ஒன்றை நிறுவுவதென பருத்தித்துறை ரோட்டறிக் கிளப்பினர் முடிவுசெய்துள்ளனர்

## பொன்னாலைக்கு தண்ணீர் சப்ளை

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் சு. கந்தசுவாமி ஜே. பி. மின்சாரப் பகுதியினருடன் நேரடித் தொடர்பு கொண்டதன் பலனாக மூளாய் வைத்தியசாலையிலிருந்து மின்சாரத்தைப் பெற்று குழாய் மூலம் தண்ணீரும் மின்சாரமும் பெற்றுக்கொள்ள அனுமதிகிடைத்துள்ளது. பொன்னாலை தண்ணீர்தொட்டி இருக்கும் இடம் வரை மின்சார கம்பங்களை நிறுத்தி மின்சாரத்தைக் கொண்டுசெல்வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து தந்தால் மின்சாரத்தைக் கொடுக்க முடியும் என மின்சாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். கடந்த பத்துவருடங்களாக யந்திர மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும் கிராமசபையினர் பல கஷ்டங்களை அடைந்துள்ளனர் பல நூற்றுக்கணக்கான ரூபாயை இத்திட்டத்திற்கு செலவு செய்துள்ளனர்.

அரசாங்கம் மூளாய் வைத்தியசாலைக்கு சுன்னாகத்திலிருந்து மின்சாரம் விநியோகம்செய்கின்றது. மின்சாரப் பகுதியினரின் சம்மதம் கிடைக்கதையடுத்து கிராமசபைத் தலைவர் வடபகுதி உள்ளூராட்சி அதிபர் எஸ். சி. மாணிக்கவாசகரை இவ்விஷயமாகப் பேட்டிகண்டு விளக்கியதால் இவ்வாண்டுக்குள் தண்ணீர் விநியோகம் சம்பந்தமாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் திட்டத்திற்கு ரூபா 5000 உள்ளூராட்சிப் பண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. பொன்னாலை தண்ணீர் விநியோகத்துக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தும் வேலைகள் தை மாத முற்பகுதியில் அமுல் நடத்த வேண்டிய ஏற்பாடுகள் கவனிக்கப்பட்டு வருவதாக கிராமசபைத் தலைவர் தெரிவித்தார்.

## தொழிலாளர் சங்க தீர்மானங்கள்

காங்கேசன்துறை, திங்.

சாதாரண தொழிலாளர்களைக்கொண்டு 'வாட்' சுத்தம் செய்விக்கக்கூடாது எனக்கோரும் பிரேரணை அகில இலங்கை அரசாங்க வைத்தியசாலை தொழிலாளர் சங்கத்தின் காங்கேசன்துறைக் கிளைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளரின் இலவச உடையை மாற்றவேண்டும் தொழிலாளர்களுக்கு வருடத்தில் மூன்று இலவச புகையிரத பிரயாணச்சீட்டுகள் வழங்கவேண்டும். எட்டு மணித்தியால வேலையும் மேலதிக நேரவேலைக்கு மேலதிக சம்பளமும் வழங்கவேண்டும். தற்காலிக தொழிலாளரை நிரந்தர சேவையில் சேர்க்கவேண்டும் என்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு திரு. மா. கந்தையா தலைமைவகித்தார்.

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**


# புகையிலையும் காய்கறியும் பயிரிடும் கமக்காரரே!

# பொஸ்றின்

உபயோகித்து உங்கள் பயிர்ப்பீடைகள் அனைத்தும் உடனே ஒழிவதை உறுதி செய்யுங்கள்.

- ☆ உடனே செயலாற்றுவது
- ★ சக்தி வாய்ந்தது
- ★ பயிரிற் செறிவது (பயிரிற் செறிந்து, அதைத் தாக்கும் எந்தக் கிருமியையும் கொன்றெழிக்கிறது.)
- ☆ பனிப் பூச்சி, அழுக்கணவன், மயிர்க்குட்டி, சந்துக்குத்தி முதலானவற்றை அழிக்கவல்லது.
- ☆ கோவா, கத்தரி, மற்றும் காய்கறிப் பயிர்களுக்கும் உகந்தது!



பொஸ்றின்

ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

குறிப்பு இல: எல். ஏ. | 1114
காணி எடுத்தற்சட்டம் (அத்தியாயம் 460)
7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானி பத்திரிகை இலக்கம் 14,587 (பகுதி III-ல்) பார்க்கவும்.

அட்டவணை

பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்: நெடுந்தீவுப் பிரிவு.
கிராமத்தின் பெயர்: நெடுந்தீவு மத்தி.
காணியின் பெயர்: கோணையன் தோப்பு, முக்கறையான் தோப்பு, கிராமச் சங்கப் பாதை, தட்டாவளவு என்பன.
ஆரம்பப்பட இல: துண்டு இல: பி. பி. எ. 2175இல் துண்டு இல, 1,2,34,.5, 6,7,8,9.10 ஆகியன.

ஆ. பெருகமயிலூர்
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

978

REGAL--JAFFNA
NOW SHOWING

James Garner
Julie Andrews
IN
M. G. M's
The Americanization of Emily

நியூ
காலிங்கன் சினிமா
(இணுவில்)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
நீதிக்குப் பின் பாசம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30 6-30, 9-45 சனி-ஞாயிறு 10-30
S பாலச்சந்தர் - விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை


## யாழ்ப்பாண மாநகரசபை
## சோலைவரி
## நான்காம் கந்தாயம் 1965

1965ம் ஆண்டு நான்காம் கந்தாயத்துக்கான சோலைவரிப்பணம் 1965ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் (3-00) மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் கூடுதலாகப் பத்து வீதம் வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.


காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற்கட்டளைகள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 31-12-65 நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும்பொழுது வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களும் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

ஹட்சன் செல்வராசா
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15-12-65.

## 132 பேர் பலி

சைகோன். டிச. 20
சைகோனிலிருந்து 355 மைல் தூரத்தில் நிகழ்ந்த சண்டையில் 132வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்.
பி. டி. ஸி.)



## யாருக்கும் வெற்றியில்லை

குரும்பசிட்டி, ஞாயிறு
குரும்பசிட்டி உதயதாரகை மன்ற ஆதரவில் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கீழ் குப்பிளான் சனசமூக நிலைய விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் ஏழாலை யுனைட்டெட் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்ட போட்டி யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

ஆட்ட ஆரம்பமே மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. ஏழாலை முன்னணி வீரர்கள் ஓரிரு தடவைகள் பந்தைக் கொண்டு சென்றபோதிலும் குப்பிளான் பின்னணி வீரர்கள் மிகவும் திறமையாக அதைத் தடுத்துக்கொண்டனர். சுமார் பதினைந்து நிமிடமளவில் ஏழாலை முன்னணி வீரர் பரராஜசிங்கம் வெகு துரிதமாக ஒரு கோலைப் போட்டு தமது கோஷ்டிக்கு ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார். இடைவேளைக்கு முன் சுமார் ஐந்து நிமிடமளவில் குப்பிளான்கோஷ்டி முன்னணி வீரர் திருபுரைரத்தினம் ஒருகோலைப் போட்டு கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தினர். இடைவேளையின் போது எண்ணிக்கை 1—1 ஆக இருந்தது.

ஆட்டத்தின் இறுதிக் கட்டத்தில் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தாலும் எவரும் கோல்போடவில்லை.

இப்போட்டிக்கு திரு. சண்முகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இதே தினத்தன்று தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்திற்கும் ஊரங்குனை விவேகானந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற இரண்டாம்பிரிவுப் போட்டியில் தெல்லிப்பழை 4—1 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு திரு. மணியம் மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம். திங்.
யாழ்விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பொலிஸ்கோஷ்டிக்கும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்குமிடையே நடைபெற்ற காரசாரமான போட்டியில் பொலிஸ் கோஷ்டி வென்றது.

பொலிசார் இறுதியில் வெற்றிபெற்றபோதும் காங்காசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைகோஷ்டியினர் விட்டுக்கொடுக்காமல் விளையாடியது பாராட்டுதற்குரியதாகும். முதலாவது ஆட்டத்தில் பொலிசார் 14—5 புள்ளிகளால்தொழிற்சாலைக் கோஷ்டியை வெற்றியீட்டினர். இதையடுத்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டம் பார்ப்பதற்கு மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது. இரு கோஷ்டியும் விறுவிறுப்பாக மோதின.

பொலிஸ் வீரரான அல்விஸ்சின் விளையாட்டு அபாரமாகவும் அற்புதமாகவும் காணப்பட்டது. தொழிற்சாலைக் கோஷ்டியில் எஸ். இராசரெத்தினம், எஸ். நாகரத்தினம் ஆகியோரின் ‘மின்னல்’ அடிகள், போட்டிக்கு விறுவிறுப்பைக் கொடுத்துக்கொண்டிருந்தது. எனினும் பொலிசார் இரண்டாவது போட்டியிலும் 14—7 புள்ளிகளால் தொழிற்சாலைக் கோஷ்டியைத் தோற்கடித்தனர். அடுத்து இரண்டு போட்டிகளிலும் வெறிபெற்று பொலிசார் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக் கோஷ்டியைத் தோற்கடித்தனர். யாழ். பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றஇப்போட்டிக்குதிரு. எஸ். பத்மநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## கல்விப் பகுதியிடம் கடற்படை தோல்வி

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ். விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் காரைநகர்ப்பகுதி கடற்படைவீரர் கோஷ்டியை யாழ். கல்விப்பகுதிக் கோஷ்டி வெற்றியீட்டியது.

போட்டி ஆரம்பத்திலிருந்து முடியும்வரை ரசிப்பாகக் காணப்படவில்லை. கல்விப்பகுதியினரின் விளையாட்டுத்தரத்துக்கு கடற்படைவீரர் கோஷ்டி அமையாததே இதற்குக் காரணமாகக் காணப்பட்டது. கல்விப்பகுதியினரின் பாராட்டுக்குரிய விளையாட்டையே ரசிகர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

முதலாவது ஆட்டத்தில் கடற்படைவீரர் 7 புள்ளிகளும் கல்விப் பகுதியினர் 14 புள்ளிகளும் பெற்றனர், கடற்படைவீரர் கோஷ்டியின் தலைவரான எட்வினது விளையாட்டே கடற்படைக் கோஷ்டிக்கு ‘உயிர்’ கொடுத்துக் கொண்டிருந்தது. கல்விப் பகுதியின் சிறந்த வீரர்களான எம். சீவரத்தினம், எஸ். பத்மநாதன், எஸ். சதாசிவத்தின் உதவி புள்ளிகளை அடிக்கடிப் பாய்ந்து அடித்தார்கள். எஸ். சதாசிவத்தின் விளையாட்டு பாராட்டத்தக்கது. இரண்டாவது ஆட்டத்திலும் கல்விப்பகுதி 14—4 புள்ளிகளால் கடற்படை வீரர்களைத் தோற்கடித்தது. கல்விப்பகுதியினர் இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று காரநகர் பகுதி கடற்படை வீரர்களைப் படுதோல்வியடையச் செய்தனர். யாழ். பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.


9-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி)
மொடேர்ன் (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) விஜயா (அம்பாறை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
ஈஸ்மென்கலர்



## வரிவிளம்பரம்

### தேவை

புளக் மேக்கிங் (Block-making) ஸ்தாபனத்திற்கு வேலை பழகுவதற்கு இருவர் தேவை. கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தில் விஞ்ஞானப் பாடத்தில் சித்தியெய்தியவருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். தகுந்த வேதனம் கொடுக்கப்படும். மறுவிபரங்களுக்கு வேலை நேரத்தில் நேரில் வரவும். A. P. V. புளக் மேக்கிங் இன்டஸ்றீஸ், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். 1616

அக்கராயன் குளம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் நுகர்ச்சிப்பொருள் விற்பன்வுப் பகுதிக்கு ஒரு மனேஜர் தேவை. ஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவராயும், அனுபவமுள்ளவராயும் இருத்தல்வேண்டும். பிணை: காசாக ரூபா 1000/-, ஆதனமாக ரூபா 2000/-. வயது 35-க்குள். சம்பளம் ரூபா 100/- தொடக்கம் ரூபா 125/- வரை, தகுதிக்கேற்ப கொடுக்கப்படும். உறையில் ‘மனேஜர் தேவை’ என்று குறிப்பிட்டு 29-12-65 -க்கு முன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். 1608

காரைநகர், களபூமி ஐக்கிய பண்டகசாலைக்கு மனேச்சர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 30க்கு மேல். கனிஷ்ட பாடசாலைத் தராதரம், கூட்டுறவுப் பயிற்சி அனுபவம் பெற்றவர்கள் கவனிக்கப்படும். மாதச்சம்பளம் எல்லாம் உட்பட ரூபா 100/-. ரொக்கப்பிணை ரூபா 1000/-; ஆதனப் பிணை ரூபா 2000/-. தராதர நற்சாட்சிப் பத்திரங்களுடன் 30-12-65 முன் ஷெ பண்டகசாலைத்தலைவருக்குப் பதிவுத் தபால் மூலம் மனுச்செய்யவும். விண்ணப்பிப்போர் 2-1-66 காலை 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். 1617

நன்கு அனுபவமுள்ள தையல்வேலைதெரிந்தபெண் தொழிலாளர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் 25-12-65க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும்: ‘‘சுசுல்’’ இன்டஸ்றீஸ், 47, பீச் ரூேட், யாழ்ப்பாணம். 1612

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.



○ சீன சயிக்கிள் ரயர்கள்
○ ஹய்லோன் கேற்றின் நெற்றிங்
○ ஒஸ்றம் வல்ப்ஸ்

கிடைக்குமிடம்:

யாழ் குடாநாட்டுக் கூட்டுறவுப் பொறியியல் சங்கம்
(விஷ்ணுசுந்தரம் கட்டிடம்)
289, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சிறந்த கட்டிட, தண்ணீர் விநியோக, மின்சார வேலைஒப்பந்தக்காரர்கள், கட்டிடப்படங்களுக்கும், கணக்குப் பிரமாணத்திற்கும் உடனே தொடர்பு கொள்ளுங்கள்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திபெத் விவகாரம்

# கம்யூனிஸ்ட் சீனுவுக்கு ஐ. நா. கண்டனம்

நியுயோர்க், டிச. 19

திபேத் மக்களின் ஆதார உரிமைகளையும் சுதந்திரத்தையும் பறிப்பதை சீனு கைவிடவேண்டுமென்று கோரும் கண்டனத்தீர்மானம் ஐக்கிய நாடுகள் மகாசபைக் கூட்டத்தில் நிறைவேறியது.

திபெத்பற்றிய விவாதம் ஐ. நா. வில் விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திபெத் மக்களின் நல உரிமைகள் குறித்து ஐ. நா. மகாசபை இயற்றும் தீர்மானங்களை சீனு புறக்கணித்து வருகின்றதென்று சில அங்கத்தவர் புகார் செய்தனர்.

ஐ. நா. வின் கண்டனத் தீர்மானத்தை எல்லா கம்யூனிஸ்டு நாடுகளும் எதிர்த்தன.

# தமிழ்பாடசாலைகள் விவகாரம்: துணைக்குழு ஆராயும்

யாழ்ப்பாணம், திங்.

தமிழ் பாடசாலைகள் மூடப்படுவதையும், பொதுப் பாடசாலைகளில் தமிழ்பிரிவுகள் மூடப்படுவதையும், நிறுத்துமாறும், மூடப்பட்ட தமிழ் பாடசாலைகளையும், தமிழ்ப் பிரிவுகளையும் மீண்டும் ஆரம்பிக்கும் படியும், அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கொண்டுவந்தபிரேரணையை

ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட துணைக்குழு சென்ற வாரம் கூடி, சிலவிஷயங்கள் பற்றி ஆராய்ந்தது.

இக்குழு முன்னிலையில் கிளிநொச்சி எம். பி. சமர்ப்பித்த சில விஷயங்கள் ஆராயப்பட்டு அடுத்த மாதம் 15-ம் திகதி மீண்டும் கூடுவதென தீர்மானிக்கப்பட்டது.

துணைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு தென்னிலங்கையில் மூடப்பட்ட தமிழ்ப்பாடசாலைகள், தமிழ்ப்பிரிவுகள் ஆகியவற்றின் விபரங்களையும், மூடப்பட்டகாரணங்களையும், படித்த தமிழ்மாணவர்களின் தொகையையும், தமக்கு அறிவிக்குமாறு பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் கிளிநொச்சி எம். பி. கேட்டுள்ளார்.

இவ்விபரங்களை தமிழரசுக் கட்சிப் பாராளுமன்றக்குழு, தமிழ்க்கல்வி விஷயமாக பிரதம மந்திரியை பேட்டிகாணும் பொழுது பயன் படுத்தும்.

## மோசடி அம்பலம்!

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாண மாநகரசபையைச்சேர்ந்த கட்டட ஓவசியர் ஒருவர்சிமெந்துமோசடி சம்பந்தமாகபொலிசாரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் பதின்மூன்றும வட்டாரத்தில்மார்க்கட்டில் ஒரு கட்டட வேலைக்கென வழங்கப்பட்ட சிமெந்துப் பாக்கட்டுகளில் ஐந்து பாக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுகளை இந்த ஓவர்சியர் கூடியவிலைக்கு யாருக்கோ விற்றதாகத் தகவல்கிடைத்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொலிசாரின் உதவியுடன் மாநகரசபை அதிகாரிகள் கட்டடவேலை நடைபெறும் இடத்திற்கு நேரில் சென்று விசாரணை செய்ததுடன் விற்கப்பட்ட ஐந்து பாக்கட் சிமெந்தையும் பண்டியன் தாழ்வு என்னுமிடத்தில் ஒரு வீட்டிலிருந்துகைப்பற்றினர். சிமெந்து ஏற்றிச் சென்றவரினதும் சிமெந்தை விலைக்கு வாங்கியவரினதும் வாக்குமூலங்களைப் பொலிசார் பதிவுசெய்தனர்.

## நாடக மன்ற நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

மாதகல் கலை அமுத நாடக மன்றத்தின் 11-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் மாதகல் இளைஞர் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு:

தலைவர்: வி. செல்லத்துரை, உபதலைவர்: எம். திருச்செல்வம். காரியதரிசி: எம் சின்னத்தம்பி, உப காரியதரிசி: வி. கந்தசாமி, தனாதிகாரி: ஏ. லூயிஸ், நிர்வாகசபை உறுப்பினர்கள்: என். பி. யோசேப், என். செல்லத்துரை, பி. கந்தஞானியார், எம். ரூேச்மரியதாசன்.

## மதியபோசன விருந்து

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை நகர சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய எட்டு அங்கத்தவர்கட்கு 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த வாலிபர்கள் மதிபோசன விருந்தொன்று அளித்துக் கௌரவித்தனர்.

வெற்றியீட்டிய தற்போனதய தலைவர் திரு. ந. நடராசா, உபதலைவர் திரு. வே. நாகநாதன் ஆகியோர் உட்பட சகல அங்கத்தவர்களும் சமுகம் அளித்த இவ்விருந்தில் பல பிரமுகர்கள் உட்பட சுமார் 200 பேர்வரை கலந்து கொண்டனர்.

## இ. போ. ச. நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய விசாரணை அதிகாரியாயும், பொதுசன உறவு அதிகாரியாயும், திரு. எஸ். சிறிபாஸ்கரன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. சிறிபாஸ்கரன் கடந்த பொதுத்தேர்தலில், காங்கேசன்துறை தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராக போட்டியிட்டவராவர்

தமிழ்நாடு அபிவிருத்தி

## ரூபா 75 கோடி

சென்னை, டிச. 19

1966—67-ம் ஆண்டு தமிழ்நாடு அபிவிருத்தி திட்டத்துக்கு ரூபா 75 கோடியே 30 லட்சம் திட்டக்கமிஷனுல் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

## "ஆசிரியர்கள் இடமாற்றம் கல்வியைப் பாதிக்கும்"

உரும்பிராய், ஞாயிறு

'அடிக்கடி நடைபெறும் இடமாற்றத்தால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படும். அரசினர் ஆசிரியர்களுக்கும், சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் உள்ள பேதங்கள் நீக்கப்பட்டு, ஒரு முதுமுறை அட்டவணை தயார் செய்யாமல் இடமாற்றம் செய்வதால், பாடசாலைகளில் குழப்ப நிலை ஏற்படுகிறது'

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற பாடசாலை பெற்ரூேர்-ஆசிரியர் சங்க கூட்டத்திற்கு தலைமை தாங்கிய சங்கத் தலைவர் திரு. அ. இளையதம்பி மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர்கள் மிகவும் குறைவாக உள்ள உரும்பராய் கிராமத்தில் கடமையாற்றும் ஒருசில உரும்பிராய் ஆசிரியர்களை வெளியிடங்களுக்கு மாற்றுவது பாடசாலைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்று திரு. அ. சேனாதிராசா பேசும்போது கூறினார்.

உரும்பராய் சைவத் தமிழ் பாடசாலையிலிருந்து ஒரே தடவையில் நான்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்துள்ளது கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும் என திரு. ஆ. முத்துவேலு கூறினார்.

## ரூபா 71 கோடி சேர்ந்தது

புதுடில்லி, டிச. 19

கடந்த 15-ம் திகதிவரை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ரூபா 70 கோடியே 96 லட்சம் சேர்ந்திருக்கிறது. செப்டம்பர் 1-ம் திகதிக்கு பின் மட்டும் ரூபா 10 கோடியே 35 லட்சம் ரூபாய் சேர்ந்திருக்கிறது. 4789 கிலோகிராம் தங்கம் பாதுகாப்பு நிதியில் முதலீடுசெய்யப்பட்டிருக்கிறது.

## டேர்லின் சேட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் நடந்த இடத்திலுள்ள சில கிணறுகளில் தேடிப்பார்த்து விட்டு கீரிமலை, பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கும் அவரைத்தேடி ஆட்கள் அனுப்பப்பட்டனர் நேற்றுக் காலை காலஞ் சென்றவரின் நண்பரான மாணிக்கம் தியாகராசா சடலம் கிணற்றில் கிடப்பதாக தெரிவித்ததைத் தொடர்ந்து சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. மரணவிசாரணை நடைபெற்றது.

காலஞ்சென்றவரின் தாயார் சாவித்திரிதேவி சாட்சியமளித்த பொழுது கூறியதாவது: காலஞ்சென்றவர் எனது மகன், இம்முறை இவர் ஜி. சி. ஈ. பரீட்சை எழுதினார். கடந்த ஒருவருடகாலமாக என்னுடன் கோபித்துக்கொண்டு சித்தங்கேணியிலுள்ள மாமியார் திருமதி வைத்திலிங்கம் வீட்டில் தங்கியிருந்தார்.

டர்லின் சேட் வாங்கித் தரும்படி என்னிடம் கேட்டார். வாங்கிக்கொடுக்க நான் மறுத்ததால் கோபித்துக்கொண்டு மாமியார்வீடு சென்றார். அன்று முதல் அவர் வீட்டிற்குவரவில்லை. சில சொந்தககாரர்கள் சென்று புத்திமதி சொல்லியும் அவர் வீட்டிற்கு வரவில்லை. சிங்கப்பூரிலிருந்து அவரது சகோதரி ஒருடசின் டர்லின் சேட் கொண்டு வந்து கொடுத்து என் வீட்டிற்கு வரும்படி புத்தி கூறினார். அதற்கும் அவர்சம்மதிக்கவில்லை. ஜி. சி. ஈ. பரீட்சைக்கு அவர் இன்னும்ஒரு பாடம் எடுத்து முடிக்கவில்லை.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என தீர்ப்பளித்தார்.

கி. பாகிஸ்தானில்

# புயலினுல் பாதிக்கப்பட்ட 125 பேரை விமானம் மீட்டது

டாக்கா, டிச. 20

அண்மையில் கிழக்குப் பாகிஸ்தானில் வீசிய புயலினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பல வெளிநாடுகள் உதவிகள் அளிக்க முன்வந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நெதர்லாந்து அரசாங்கம், கம்பளிகளையும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் வழங்கியிருக்கிறது.

இறற்கிடையே புயலினுல் பாதிக்கப்பட்டு காணமற் போனவர்களைத் தேடும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நேற்று பாகிஸ்தான் விமானமொன்று கடலிலிருந்து 125 பேரை மீட்டது. இப் புயலினுல் சுமார் 20,000 பேர் மாண்டனர்.

## எம். ஜி. ஆர். . . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினரா வென்பதை அவர் கூறுவாரா?

ஆமெனில், அக்கூட்டாலோசனைகள் சம்பந்தபாய் இரகசியப் பொலிசார் இரகசியக் குறிப்புகள் எடுத்துள்ளனரா?

ஆமெனில் அக்குறிப்புகளின் பொருளடக்கத்தை அவர் வெளிப்படுத்துவாரா?

இல்லையெனில், ஏன்?

திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி — நிதி அமைச்சரிடம் பின்வரும் கேள்விகளைக் கேட்பார்:

தென் இந்திய சினிமா நடிகர்களான திரு. எம். ஜி. இராமச்சந்திரன், செல்வி சரோஜாதேவி ஆகியோர் இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்தது தொடர்பாய் அவர்களின் பிரயாணச் செலவுகளுக்கெனச் செலவிடப்பட்ட தொகை என்னவென்பதை அவர் கூறுவார ?

இச்செலவுகளைப் பொறுத்தவரின் பெயரை அவர் கூறுவாரா?

அவர்களுக்கு அனுமதிக்கப்பெற்ற அந்நியச் செலாவணி எவ்வளவு? அவர்களுக்கு இப்பணத்தைக் கொடுத்தவர் யார்?

## இருல் கறி உண்டபின் மரணம்?

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பெண் பொன்னம்மா (வயது 27) இருல் கறியுடன் சோறு உண்டபின் ஏற்பட்ட வயிற்ரூேட்டம் காரணமாக மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தால் மரணமானர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் ஈரலில் ஏற்பட்டவியாதியால் இயற்கை மரணமென தீர்ப்பளித்தார்.

## மழையினுல்புகையிலை பயிர் நாசம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

ஒரு மாதகாலமாகத் தொடர்ந்து மழைபெய்தமையால் கெருடாவில், தொண்டமானுறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளின் பீடிப்புகையிலைப் பயிர், வெண்காயம் போன்றவை அழிந்து போனதை நேரில் பார்வையிட்ட பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், பேராதனை அரசாங்க விவசாயப் பகுதியினர் பீடிப்புகையிலை விதைகளை இப்பகுதிக்கு அவசரமாக அனுப்பிவைக்குமாறு அதிகாரிகளுக்கு தந்தி மூலம் விண்ணப்பித்துள்ளார்.

## வேள்விப் பலியை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோவிலில் பலி நிறுத்தப்படுமெனவும் பொதுமக்கள் இக்கருத்திற்கு ஆதரவாக இருக்கிறார்களென றும் முதலாவது பிரதிவாதி இம்முடிவிலிருந்து மாறியுள்ளாரென்றும், இதன் காரணமாக அவர் மீது தொடரப்பட்ட வழக்கு தீர்ப்பின் பின் பிரதிவாதி கோவிலைப்பூட்டி பொதுமக்கள்வணங்குவதை தடுத்தாரென்றும் வாதிகள் மனுவில் மேலும் கூறப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பிரதிவாதிகளின் சார்பில் விசாரணை ஆரம்பமான போது கோவில்களில் ஆடு கோழிபலியிடுதல் சமயசபபந்தமான சடங்கு அல்லவென்றும் இது தொடர்ந்து நடைபெற அனுமதிக்க வேண்டுமென்றும் கோரப்பட்டது.

சுழிபுரத்திலுள்ள பொதுமக்கள் பலிநிறுத்தத்திற்குப் பூரண ஆதரவுகொடுத்து வருகிறார்கள் என்றும் கோவில் முகாமையாளர் சபையில் பெரும்பான்மையினர் பலிநிறுத்தத்திற்கு ஆதரவளித்துள்ளார்கள் என்றும் ஆதலால் பலியிடுவதை நிறுத்தவேண்டுமெனவும் விசாரணையின்போது வாதிதரப்பில் கூறப்பட்டது.

விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தசமயம் வழக்கைச் சமாதானமாகத் தீர்க்க இருசாராரும் உடன்பட்டனர்.

வாதிகளும், பிரதிவாதிகளும் சுழிபுரம் பத்திரகாளி அம்மன்கோவில் கூட்டு முகாமையாளர்களாகவும், கூட்டுச் சொந்தக்காரர்களாகவும் உள்ளனரென தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

1965 ஏப்ரல் 15ந் தேதி தொடக்கம் பலியிடுவதை நிறுத்தவேண்டு மென்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

வாதிகளான க. பொன்னையா, சின்னப்பு கனகசபை ஆர். சுந்தரம் ஆகியோர் சார்பில் அட்வகேட் திரு. எஸ். ஆர். கனகநாயகம், அட்வகேட் திரு. எஸ். பொன்னையாவின் உதவியுடனும், புரக்டர் திரு எஸ் செல்வராசாவின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

பிரதிவாதிகளான எஸ். ஆசைப்பிள்ளை, திருமதி அ. ஆசைப்பிள்ளை ஆகியோர் சார்பில் அட்வகேட் திரு ரி முத்துசாமிப்பிள்ளை, அட்வகேட் திரு பி. சோமதிலகத்தின் உதவியுடனும், புரக்டர் திரு. எஸ். திருநாவுக்கரசுவின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

---

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில், பொலிஸ் நிலையத்திற்கு சமீபத்தில் நேற்று முன்தினம் இரவு மதுபான கடையொன்றில் பணமாக 500 ரூபாவும். சில சாராயப் போத்தல்களும் திருட்டுப் போயுள்ளது.

அக்கடையின் கூரையின் மூலம் உள் சென்றே இத்திருட்டு நடைபெற்றுள்ளது. விலையுயர்ந்த மதுபானப் போத்தல்கள் ஏராளமாக இருந்தபோதிலும், சாராயப் போத்தல் மட்டுமே திருட்டுப்போயுள்ளதாம்.

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றார்கள். அண்மையில் காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரு கடையில்பெறுமதியான பல பொருட்கள் திருட்டுப் போனது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org